தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி 2025 மடங்கல் (ஆகத்-செப்-94) விலை உருபா 1-50 (இதழ் எண் : 172)

எதிர்காலத் தன்னாட்சி பெற்ற தமிழகம் இப்படித்தான் இருக்க வேண்டும்!

தமிழ்நாடு மார்க்சிய-இலெனினியக் கட்சி, தேசிய விடுதலைப் புரட்சியின் பணிகளாக வகுத்தளிக்கும் திட்ட அறிவிப்பை நாம் வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம்!

தமிழ்நாடு மார்க்சிய இலெனினியக் கட்சி, தன் கட்சித் திட்ட வரைவை அண்மையில் வெளியிட்டுள்ளது. அதன் விளக்க அறிக்கையை நாம் கவனமாகக் கருத்தில் கொண்டோம். அதில் கூறப் பெற்றுள்ள விளக்கங்கள் இன்றுள்ள இந்திய வல்லாளுமை ஆட்சி முறையை எதிர்த்தும், முழு இறைமையுள்ள தனித்தமிழ் நாட்டை ஆதரித்தும் மிகச்செப்பமான முறையில் எடுத்துக் கூறப் பெற்றுள்ளன. அவற்றுள் சில திருத்தங்கள் தவிர, மற்றவற்றை நாம் முழுமையாக வரவேற்கிறோம். அந் நீண்ட விளக்க அறிக்கையை நாம் இங்கு முழுவதுமாக வெளியிட இயலவில்லை. எனினும், அதில் தேசிய விடுதலைப் புரட்சியின் பணிகளாக வெளியிடப் பெற்றிருக்கும் கருத்துகளைப் போதிய மட்டில் சுருக்கமாக இங்குத் தருகிறோம். தமிழ்நில விடுதலையை விரும்பும் புரட்சி உள்ளங்கள் இவற்றை நன்கு உள்வாங்கிக் கொண்டு, தீர சிந்தித்துத் தம் செயல் பாட்டிற்குக் கொண்டுவரப் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

தேசிய விடுதலைப் புரட்சியின் பணிகள்:

அ. அரசியல் துறையில்:

1) தமிழகத்தை இந்தியத் தரகு—பார்ப்பனிய வல்லரசியத்தின் வல்லாண்மையிலிருந்து மீட்டு முழு இறையாண்மை கொண்ட நாடாக அறிவிக்கும்.

2) தமிழகத்தில் உள்ள இந்தியத் தரகு—பார்ப்பனிய வல்லரசியத்தின் எல்லாவகையான அரசியல் அதிகார நிறுவனங்களையும் கலைத்து விட்டு ஒரு தேசிய அரசை—மக்கள் குடிநாயக அரசை—நிறுவும்.

3) 'தமிழ் மக்கள் குடிநாயக அரசு' அனைத்து மட்டங்களிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பகராளிகளால் ஆள அதிகார அமைப்புகளைக் கொண்டதாக இருக்கும். அதிகார அமைப்புகளுக்கான தம் பகராளிகளைத் தேர்ந்தெடுக்கவும் திருப்பி அழைக்கவும் மக்கள் உரிமைபெற்றிருப்பர்.

4) தரகு—பார்ப்பனிய வல்லரசியத்தின் ஞாயமன்றங்கள் ஒழிக்கப்பட்டு, அனைத்து மட்டங்

களிலும் தமிழ்த் தேசிய மக்கள் ஞாய மன்றங்கள் அமைக்கப்படும்; அவை தமிழ் மக்கள் குடிநாயக அரசின் புதிய அரசியல் அமைப்புக்கு உட்பட்டு இயங்கும்;

5) தமிழகத்தில் இருக்கும் தரகு—பார்ப்பனிய வல்லரசியத்தின் அனைத்து வகைப் படை அமைப்புகளும் கலைக்கப்பட்டு, புரட்சி தேசிய விடுதலைப்படையும்; மக்களின் படைக்கலம் தாங்கிய அமைப்புகளும் மக்கள் குடிநாயக அரசையும் மக்களையும்காக்கும் பொறுப்பேற்கும்;

6) எதிர்ப் புரட்சியாளர்கள், தேசப் பகைவர்கள் மக்கள் பகைவர்கள் ஆகியோரின் ஒப்போலை உரிமை பறிக்கப்படும்; பதினெட்டு அகவை அடைந்த அனைவருக்கும் சமமான நேரடியான அனைத்தும் தழுவிய ஒப்போலையுரிமை வழங்கப்படும்;

7) கருத்துரிமை; பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டம் கூட்டும் இயக்கம் சேரும் உரிமை எதிர்ப் புரட்சியாளரையும், தேசப் பகைவரையும் தவிர்த்து அனைத்து மக்களுக்கும் அளிக்கப்படும்; மாந்த உரிமை பேணப்படும்;

8) தேசிய இனச் சிறுபான்மையினர், புலம் பெயர்ந்து வந்தோர், பழங்குடி மக்கள் ஆகியோருடைய உரிமைகள் பாதுகாக்கப்படும். அயலகம் வாழ் தமிழ் மக்களும், அறிவாளரும், திறனுளரும் தாயகம் திரும்ப வரவேற்கப் படுவர்;

ஆ. பொருளியல் துறையில்:

1) அயலக முதலீடுகள் வைப்பகங்கள், தொழில் நிறுவனங்கள் அனைத்தும் இழப்பீடின்றிப் பறிமுதல் செய்யப்பட்டுத் தேசிய உடைமையாக்கப் படும்;

2) தரகுப் பெருமுதலாளிகளின் நிறுவனங்கள், உடைமைகள் அனைத்தும் இழப்பீடின்றிப் பறிமுதல் செய்யப்பட்டுத் தேசிய உடைமையாக்கப் படும்;

3) வல்லரசியங்களுடன் இந்தியஅரசு செய்து கொண்டுள்ள காப்புவரி, வணிகப் பொது ஒப்பந்தம் உள்ளிட்ட பொருளியல் ஒப்பந்தங்கள் அனைத்தும் தமிழகத்தில் செயலிழக்கச் செய்யப் படும்;

4) பெரு நிலக்கிழார்கள், அவர்களின் பிடியில் இருக்கும் கோயில்கள், மடங்கள் மற்றும் பிறமத நிறுவனங்களின் நிலங்களும் நிறுவனங்களும் இழப்பீடின்றிப் பறிமுதல் செய்யப்படும். நிலமற்ற கூலி ஏழை உழவர்களுக்கு நிலம் பகிர்ந்தளிக்கப் பட்டுக் கூட்டுறவு முறை ஊக்கு விக்கப் படும்; கொடு வட்டி மற்றும் அனைத்து ஒட்டுண்ணி முதலீடுகளும் ஒழிக்கப்படும். உழவர்களின் கடன்கள் முற்றாக நீக்கம் செய்யப்பட்டு, அவர்களுடைய வேளாண் பொருள் தேவைகளும், இடு பொருள் மற்றும் சதைத் தேவைகளும் உரிய முறையில் நிறைவு செய்யப்படும்; நிலக்கிழாரிய, அரை நிலக்கிழாரிய, சாதிய வல்லாண்மை உறவுகள் முற்றாக ஒழிக்கப்படும்.

5) தொழிற்சாலைகள் இயங்கும் முறை சீரமைக்கப்பட்டுத் தொழிலாளர் வாழ்நிலை உயர்த்தப்படும்; எட்டுமணி நேர வேலை, ஊதிய உயர்வு, வாழ்நிலை உயர்வு உறுதி செய்யப்படும்; தேசியத் தொழில்களுக்கும்; தேசிய முதலாளிகளுக்கும் பாதுகாப்பும் வளர்வதற்கு ஊக்கமும் அளிக்கப்படும், நமது தேசிய அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு வகை செய்யப்படும்;

6) வேளாண் சமநிலை பேணப்படும்; உயரிய மரபு வழி விதைகள், வேளாண் முறைகள், பாசன முறைகள் பாதுகாக்கப்பட்டு உரிய வழியில் வளர்த்தெடுக்கப்படும். தேசிய வேளாண் கொள்கை வகுத்துச் செயல்படுத்தப் படும்.

7) மீனவர்கள், கைத்தறி மற்றும் பிற கைவினைத் தொழிலாளர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வகை செய்யப்படும்;

8) சுற்றுச் சூழல் கெடுக்கும் தொழில், வேளாண் முறைகள் கட்டுப்படுத்தப் பெறும்; இயற்கை, மாந்தன், தொழில் நுட்ப வளர்ச்சி இவற்றுக் கிடையிலான சமநிலை பாதுகாக்கப் படும். வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டு, சிறு தொழில்களுக்கு முகாமையளித்து, பெருந் தொழில்களின் வளர்ச்சிக்கு வகை செய்யப்படும். இவற்றுக் கிடையிலான சமநிலை பாதுகாக்கப்படும். அயலக அறிவியல், தொழில்நுட்ப ஆக்கங்கள் நமது நாட்டின் தன்னாட்சி, தற்சார்பு, குடிநாயக வாழ்விற்கும், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, மக்கள் நல்வாழ்வு ஆகியவற்றுக்கும் உதவும் வகையில் பயன்படுத்திக் கொள்ளப்படும்,

9) கறுப்புப்பணம், கள்ளச்சந்தை, பதுக்கல் விலை உயர்வு, வேலையின்மை முதலியவை ஒழிக்கப் படும், அதிகமான வரி இடுவிப்புகள் நீக்கப்பட்டு, ஒருமுகப்படுத்தப்பட்ட சீரான வரிமுறை கொண்டுவரப்படும்; மறைமுக வரி ஒழிக்கப்படும்.

இ. கல்வி, குமுக, பண்பாட்டுத் துறையில்:

1) தரகு—பார்ப்பனிய மற்றும் மேலை வல்லரசியத்தின் பிற்போக்கு; சீரழிவுப் பண்பாடு முதலியன முற்றாக ஒழிக்கப்பட்டுத் தமிழ் தேசத்தின் உயரிய பண்பாட்டு மரபுகள் பேணப்படும், தமிழ்த் தேசியப் பாட்டாளி வகுப்பின், தேசிய, குடிநாயகப் பண்பாடு வளர்த்தெடுக்கப்படும்,

2) மதவெறி தடை செய்யப்படும், (மதங்கள் பொது நிலையில் செயல்படுவது தடுக்கப்பட வேண்டும்—இதழாசிரியர்.) கடவுள் நம்பிக்கை தனியாள் உரிமையாக்கப்படும். கடவுள், மதம் ஆகியவற்றின் பெயரால் சுரண்டுவதும், வல்லாண்மை செய்வதும் (மதப் பொது விழாக்களும்—இதழாசிரியர்) தடுக்கப்படும். தீண்டாமை 'சாதிய ஒடுக்கு முறை, சுரண்டல் தடை செய்யப் படும், சாதியக் குறியீடுகள்—குறிப்பாக மேல் தட்டு சாதியக் குறியீடுகள்—பண்பாடுகள், தாழ்த்தப்பட்ட மக்களின் சேரி முறைகள் ஒழிக்கப்படும்; அனைத்து அரங்கிலும் தாழ்த்தப்

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

புலிகள் இயக்கத்திற்கு மீண்டும் தடையா?

பழ.நெடுமாறன்- தலைவர் தமிழர் தேசிய இயக்கம்.

எதிர்பார்த்தபடியே பொய்யான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதுள்ள தடையை இந்திய அரசு மேலும் நீட்டித்துள்ளது.

இதற்காக இந்திய அரசு கூறியுள்ள காரணங்கள் நகைப்பிற்கு இடமானவையாகும் ஆடு—ஓநாய் கதையைத்தான் இது நினைவுப்படுத்துகிறது.

அனைத்துத் தமிழர்களுக்குமான தாயகம் அமைப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ள புலிகளின் இயக்கம் இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கும்,இறைமைக்கும பேரிடர் விளைவிப்பதால் இத்தடை இடப்படுகிறது என இந்திய அரசு கூறியிருப்பது அறியாமை கலந்த அப்பட்டமானபொய்யாகும்.இலங்கையில் உள்ள தமிழர்களுக்குத் தனித் தாயகம் அமைப்பதையே தங்களது நோக்கமாகக் கொண்டு விடுதலைப்புலிகள் போராடுகிறார்களே தவிர அனைத்துத் தமிழர்களுக்குமான தாயகம் அமைக்க அன்று. இந்திய அரசின் குற்றச்சாட்டு உண்மையாக இருக்குமானால் இதே இந்திய அரசு 1983-ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகளுக்குப் போர்ப்பயிற்சியும், கருவிகளும் கொடுத்து ஊக்கப்படுத்தியது ஏன்? அப்போது புலிகளின் நோக்கம் பற்றி இந்த அரசுக்குத் தெரியாதா?

இலங்கையில் இயங்கும் அமைப்பாக இருந்தாலும் தமிழ்நாட்டில் தமிழ்த் தேசிய மீட்சிப்படை, தமிழர் பாசறை போன்ற அமைப்புகளுக்கு உதவி வருகிறதுஎன்ற குற்றச்சாட்டும் பொய்யானதாகும். இத்தகைய அமைப்புகள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன என்பது எந்த நெறி மன்றத்திலும் இதுவரை மெய்ப்பிக்கப்படவில்லை. இவை தொடர்பான வழக்குகளில் கூட இன்றும் உசாவல் தொடங்கப்படவில்லை.

இராசீவ் காந்தி கொலைவழக்குத் தொடர்பான சான்றாளர்களையும், காவல்துறை அதிகாரிகளையும் ஒழித்துக்கட்ட விடுதலைப்புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்பது வடிகட்டின பொய்க் குற்றச்சாட்டாகும் இராசீவ் கொலைக்கும் தங்களுக்கும எவ்வகைத் தொடர்பும் இல்லை எனப் புலிகள் அறிவித்துள்ளனர். இராசீவ் கொலை வழக்கு உசாவலே இப்போதுதான் நடக்கிறது. நெறிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகுதான் உண்மைக் குற்றவாளிகள் யார் என்பது தெரிய வரும். இதற்கிடையில் விடுதலைப்புலிகள் மீது பழிசுமத்துவது அடாத செயலாகும். தமிழகச் சிறையில் உள்ள விடுதலைப்புலிகளை விடுவிக்க முயற்சி நடைபெறுவதாகவும் இந்திய அரசு குற்றம் சாட்டியுள்ளது. போர்க்களத்தில் படுகாயமடைந்து கை, கால்களை இழந்து நடமாட முடியாத நிலையில் பல விடுதலைப்புலிகள் மருத்துவப் பண்டுவத்திற்காகத் தமிழகம் கொண்டு வரப்பட்டனர். அவர்கள் தளைப்படுத்தப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். மாந்த நேயமற்ற இந்தச் செயலை மூடிமறைப்பதற்காகப் புலிகள் மீது வீண்பழி சுமத்துகிறது இந்திய அரசு.

இலங்கை அரசே விடுதலைப்புலிகளுக்குத் தடை நெறிக்கவில்லை. அவர்களுடன் பேச்சு உரை நடத்த முயன்று வருகிறது. இந்நிலையில் இந்தியா தடை விதிப்பது பகடிக் கூத்தாகும்.

தனிஈழம் அமைவது இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு பேரிடர்ப்பாடு என இந்திய அரசு ஓலமிடுகிறது. வங்கதேசம் அமைய உதவியதால் இந்தியா சிதைந்து விட்டதா? மேற்கு வங்காளம் பிரிந்து விட்டதா?

உலக நாடுகளின் தூதுவர்களும், உலக அமைப்புகளின் படிநிகராளியர்களும் யாழ்ப்பாணம் சென்று புலிகளின் இயக்கத் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தி வருகிறார்கள். 40க்கு மேற்பட்ட நாடுகளில் விடுதலைப்புலிகளின் இயக்கம இயங்கி வருகிறது. அந்தந்த நாடுகளின் அரசுகளுடனும் மக்களுடனும் நல்லுறவை வளர்த்து வருகிறது. பாலத்தீனிய விடுதலை இயக்கம் போலத் தமிழீழ விடுதலைப்புலிகளின் இயக்கமும் உலக நாடுகளால் மதிக்கப்படும் நிலை உருவாகி விட்டது.

இந்திய அரசின் கண்களை இஃது உறுத்துகிறது. கடந்த ஆண்டு தளபதி கிட்டு வந்த கப்பலை அனைத்து தேசக் கடலில் பிடித்த சட்டப் புறம்பான நிகழ்ச்சியும் தற்போது தடையை நீட்டித்த செயலும் இந்திய அரசின் உள் நோக்கத்தை அம்பலப்படுத்துகின்றன. விடுதலைப்புலிகளின் போராட்டத்திற்கு உலக நாடுகளில் உருவாகிவரும் ஆதரவான சூழ்நிலையைக் கெடுத்து அதை அனைத்து நாட்டு வன்முறைஇயக்கமாகச்சித்தரிக்க இந்திய அரசு திட்டம தீட்டியுள்ளது. இதன் மூலம் இலங்கை அரசிடமிருந்து இந்தியப் பெருமுதலாளிகளுக்கு வணிகச் சலுகைகளைப் பெற்றுத் தரவே இத்தடை நெறிக்கப்பட்டு உள்ளது என நான் குற்றம் சாட்டுகிறேன்.

பேராயம், அ.தி.மு.க போட்டா போட்டி அரசியலுக்கு இந்த நாடகம் நடத்தப்படுகிறது என்பதைத் தமிழ் மக்கள் நன்கு உணருவார்கள். இந்திய-தமிழக அரசுகளின் இந்த நடவடிக்கை உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களின் கண்டனத்திற்கு உரியதாகிவிட்டது.இரு அரசுகளுமே தமிழர் பகை அரசுகள் என்பதும் அம்பலமாகிவிட்டது.

இந்திய—தமிழக அரசுகளின் இச்செயல் தொலைநோக்குப் பார்வையற்ற, குறுகிய நோக்கும் கொண்ட, அரசதந்திரமற்ற நடவடிக்கை என்பதை எதிர்காலம் நிரூபிக்கும். O

முன்னிதழ்த் தொடர்ச்சி. தொடர்: 3

தமிழர்களின் அடிமைநிலையும், 'சாதி'யையும்-'இறைவனை'யும் இறுக்கமாக்கியுள்ள பார்ப்பனிய முடிச்சும்!

கரடிப்பட்டி.க.கண்ணன்.அறி.இ.

''பள்ளுப் பறை எல்லாம் கோவிலுக்குள் சென்றால் அங்கே சாமி(கடவுள்)இருக்குமா? மழை-மாரி ஒழுங்காகப் பெய்யுமா? அந்தக் காலத்தில் கீழ் வகுப்பு, மேல் வகுப்பு என்று தெரியாமலா கடவுள் பிரித்து வைத்தார். நாட்டில் இப்பொழுது தெய்வ நெறி(நீதி)யும் இல்லை; அரசு நெறி(நீதி)-யும் இல்லை; இதனால் தான் நாடு கெட்டுவிட்டது. வெள்ளைக்காரன் காலத்தில் எப்படி மழை பெய்தது''—என்ற கூற்றில் தந்நலமும் அறியாமையும் ஒரு சேர இருப்பதை நாம் அறிய-லாம. ஏனெனில் பல நூறு ஆண்டுகள் ஒவ்வொரு சிற்றூரும் ஒரு தனித்த தீவாக இருந்தது. அங்கு வலலாண்மை செலுத்திய மேல் சாதியாருக்கு மற்ற கீழ்ச் சாதியர் அவரவர் தொழில்களைச் செய்து கொண்டு அடங்கிக்கிடந்தனர். ஆனால் அன்றும் வெள்ளைக்காரன் சுரண்டியதைப் பற்றியோ தாங்கள் பல காலங்களில் வறுமையில் வாடியதைப் பற்றியோ எண்ண முடியாமல, கால மாற்றத்தில் தாழ்த்தப்பட்ட உழைக்கும் மக்களும் தங்களுக்குச் சமமாக வந்து கொண்டிருக்கின்றார்களே என்ற பொறாமையில் **மேற்கண்ட கருத்துகள் வெளிப் படுகின்றன. மேலும் இன்று பருவ மழை ஒழுங்காகப்** பெய்யாததற்கு அறிவியல் வழியான காரணங்களை ஆராய முடியாமல், கோவிலுக்குள் தாழ்த்தப்பட்ட மக்கள் செல்வதையும், சம உரிமை கேட்பதையும் சாக்காகச் சொல்கின்றனர். பார்ப்பனியம் வளர்-வதற்கான—வேர்விடுவதற்கான அடித்தளம் இங்கிருந்துதான் கிளம்புகிறது. பார்ப்பனரிடம் மட்டும் பார்ப்பனியம் இல்லை. இங்கிருந்துதான் ஆர்,எசு.எசு, இந்து முன்னணி பி.சே.பி. வளர்ந்து கொண்டுள்ளன. ஆகவே, பார்ப்பனியத்தால் அதிகம் தாக்கப்படுகின்ற தாழ்த்தப்பட்ட, பிற் படுத்தப்பட்ட மக்கள் இப் பார்ப்பனிய—மேல் சாதிய சூழ்ச்சிக்கு இரையாகிவிடக் கூடாது.

அடுத்து ஆதித் தமிழக்குலமான பறையர் குலத்தைச் சேர்ந்த ஒருவரிடம் பேசிக்கொண்டிருக்-கும் போது, குன்றக்குடி மடத்தில் ஓலைச் சுவடியில் இருந்ததாக ஒரு செய்தியைக் கூறினார். ''பூவுலகில் பறையர் தோன்றி, பள்ளர் தோன்றி......பலரும் தோன்றினர்''—என்றும்,

புராணக் கதை ஒன்றில், கடவுளுக்குப் படையல் செய்யும் போது, பூசாரியாக இருந்த பறையர் மாட்டுக் கறியை வைத்துப் படையல் செய்ததாகவும், இதையறிந்த கடவுள் இது தனக்கு ஏலாத ஒன்று என்று மூத்தவனாகிய பறையனை நீக்கிவிட்டு இளையவனான பார்ப்பானை பூசாரியாக ஆக்கியதாகவும், அன்றிலிருந்து 2000 ஆண்டு-களுக்குப் பார்ப்பானுக்கு அடிமையாக இருந்து ஏவல் செய்யுமாறு பணித்ததாகவும், பின்னர்தான் தங்கள் அடிமை வாழ்வு நீங்கும் என்றும் 'சாவம்' இட்டதாக அதிலிருப்பதாகவும் கூறினார்.

இச் செய்திகள் இன்றும் முழுமையான வரலாற்று அடிப்படையான சான்றுகளால் தெளிவாக்கப்படவில்லை யெனினும், ''பார்ப்பா-னுக்கு மூப்பன் பறையன் கேட்பார் இல்லாமல் கீழ்ச் சாதியானான்''—என்ற நாட்டுப்புற பழமொழியில் பார்ப்பானுக்கு மூத்தவன் அல்லது முன்னவன் பறையன்தான் என்பதும் சில பழமொழிகளில் வரலாற்று உண்மைகள் மறைந்திருக்கும் என்பதும் இதனால் தெரிகின்றது. மேலும் தமிழகத்தில் நடைமுறையிலும் இனவியல் நிலை-யிலும உழைப்பு நிலையிலும அடிப்படை மக்களாக இருப்பவர்கள் பறையரும் பள்ளரும் சக்கிலியருமே யாவர். இவர்களிலிருந்துதான் மற்ற சாதி மக்கள் கிளைத்திருக்க முடியும். குறிஞ்சி நிலத்திலிருந்து முல்லை நிலத்திற்கும் பின்பு மருத நிலப்பகுதியில் வேளாண்மையில தொழிலில் நிலை கொண்ட தமிழர்கள் ஏற்கனவேயிருந்த பல குலங்களோடு, வேளாண்மைக்குத் தேவையான புதிய தொழிற் பிரிவுகளையும் உருவாக்கியிருக்க வேண்டும். உழவர்-களுக்கெல்லாம் பொதுப் பெயரான 'வேளாளர்' என்ற சொல் பின்னர் 'வெள்ளாளர்' என்று தனிச் சாதியாக மருவியது, 'வெள்ளாளர்' என்றால் வெள்ளத்தை(நீரை) கட்டுப்படுத்தி ஆளுமை செய்பவன். அதாவது நீரைத் தேக்கிக் குளங்களை-யும் ஏரிகளையும் வெட்டி, கால்வாய்கள் மூலம் வெள்ளாமை—வேளாண்மை—செய்தவன்— என்று ஒரு வரலாற்றுக் குறிப்பு இருக்கிறது. இந்த வெள்ளாளரிலிருந்தே காலப் போக்கில் சிலர் சைவ வேளாளராகவும் முதலியார்களாகவும், பின்னர் இவர்களிலிருந்து தமிழ்ப் பார்ப்பனர்களாகவும் உருவாகியிருக்க முடியும் ஏனெனில் மற்ற சாதி-யினரைத் தங்களின் அறிவுத் திறத்தால் அடக்கி வேளாண்மை செய்ய வைத்து, உடல் உழைப்பி-லிருந்து படிப்படியாக விலகி மேலாண்மை நிலைக்கு வந்திருப்பார்கள். உடல் உழைப்பிலிருந்து விலகும் போது ஒருவருக்கு உடல் மென்மையாவதும்,

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

எப்பணிக்கும் முதற்பணி.

தஞ்சை நலங்கிள்ளி, -அமெரிக்கா.

நம் தமிழினமும், தமிழ் மொழியும், தமிழ் நாடும் தமிழ்ப் பண்பாடுகளும் பல்வகையிலும் வட இந்தியரால்(இந்திக்காரரால்) தாக்குண்டு, தத்தித் தடுமாறித் தவிக்கும் இருண்டகாலமிது.1-9-47-இல் ஆங்கிலேயன் தான் அடிமையாக்கி ஆண்ட இந்தியத் துணைக் கண்டத்தின் ஆட்சியை வட இந்தியன் கைகளில் கொடுத்து விட்டுப் போன நாளிலிருந்தே தமிழ்நாட்டைச் சூழ வந்த காரிருள், இன்று தமிழ்நாட்டின் எல்லாக் கூறுகளையும் இருட்டடித்து இழிவு செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. இக் காரிருளைப் போக்கித் தமிழினத்தைத், தமிழ் நாட்டைத் தமிழ்ப் பண்பாடுகளைக் காத்திடுதற்-காகத் தமிழின வுணர்வுடையார் செய்ய வேண்டிய பணிகள் மிகப் பல.

அப்பணிகளுட் சிலவாவன:

(1) தரமான தமிழிலக்கியங்களைப் படைத்துத் தமிழின இனிமையை வளமையைச் செழுமையைத் தமிழருக்கு மட்டுமன்றி உலகுக்கும் உணர்த்துதல்.

(2) தமிழின் தனித்தன்மையையும,தொன்மை-யையும் தக்க மொழியாய்வுகள் வழி நிலைப்படுத்தி, அவைதம்மைத் தமிழருக்கும் பிற இனத்தவருக்கும் உணர்த்துதல்

(3) தமிழைத் தமிழ்நாட்டின் பயிற்று மொழி-யாகவும் ஆட்சி மொழியாகவும் ஆக்குதல்

(4) நேர்முகமாகவும், மறைமுகமாவும் இந்தி திணிக்கப் படுவதைத் தடுத்தல்.

(5) தமிழ்நாட்டு விடுதலைக்கான போராட்ட முயற்சிகளில ஈடுபடுதல்.

மேற் கூறிய பணிகள் யாவற்றிலும் முதன்மையானதும், மூகாமையானதும், நாம் இறுதியிற் கூறிய தமிழ்நாட்டு விடுதலைப் போர் முயற்சிப் பணியேயாம். தமிழ்நாடு இந்தியாவின் ஒரு மாநிலமாக இந்திக்காரனுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் வரையிலும், நான் மேலே குறித்த முதல் நான்கு பணிகளும் நிலையான பயன் யாதும் விளைக்கா. அப்பணிகளெல்லாம் விழலுக்கிறைத்த நீராகும். தமிழ்நிலம் பாழாகும் ஆகவே, தமிழக விடுதலைக்கான முயற்சிகளே தமிழுணர்வாளரின் முதற் பணியாக அமைய வேண்டும். இந்த எம் கருத்தினைச் சற்றே விளக்கியுரைப்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

1. தரமான புது இலக்கியங்கள் படைப்பதும், பண்டைத் தமிழ்க்(கழகக்காலக்) கருவூலங்களின் செழுமையையும், வளமையையும் உலகுக்கு உணர்த்துவதும் நல்ல பணிகள் தாம்—தேவையான பணிகள்தாம். ஆனால் தமிழ்நாடு இந்தியாவின் ஒரு மாநிலமாக இருக்கும் வரையிலும் இத்தகைய பணிகளால் பெரு விளைவுகள் ஏற்படா. ஒரு சிறிது நலமே ஏற்படும். விளக்கம் பின்வருமாறு:

கொஞ்சம் கொஞ்சமாகக் கல்வித்துறை (மழலைப் பள்ளி முதல் கல்லூரிப் படிப்பு வரை-யிலும்)தமிழ்நாட்டு மாநில அரசின் கைகளிலிருந்து நடுவண் அரசின் கைகளுக்குப் படிப்படியாக மாறி வருகிறது. முப்பது, நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளெலலாம் தமிழ்நாட்டு மாநில அரசின் அதிகாரத்துக்குட் பட்டிருந்தன. இப்பள்ளிகளின் பாடத் திட்டங்கள் தமிழ்நாட்டு மாநில அரசால் ஏற்படுத்தப் பட்டன. இன்றைய நிலை என்ன? தமிழ்நாடெங்கும் நடுவண் அரசின் அதிகாரத்துக்குட்பட்ட பள்ளிகள் பல இயங்குகின்றன. இவற்றுக்கான பாடத்திட்டங்-களை, இப்பள்ளி மாணவர்கள் என்னென்ன படிக்க வேண்டுமென்பதை ஆயிரங்கல் தொலைவிலிருந்து கொண்டு நடுவண் அரசு தீர்மானிக்கிறது. தமிழில் ஒரு வரி கூட எழுதபபடிக்காமலே, தமிழ்நாட்டிலே பிறந்து வளரும் தமிழ்ப் பிள்ளைகள் துவக்கப் பள்ளி முதல் உயர்நிலைப் பள்ளி வரையிலும் படித்து முடிக்கலாம். இத்தகைய, நடுவண் அரசின் அதி-காரத்துக்குட்பட்ட (தமிழ்நாட்டு மாநில அரசின் அதிகாரத்துக்குட்படாத) பள்ளிகள் பெருகுமே யொழியக் குறையா. தமிழ்நாடு இந்தியாவின் ஒரு மாநிலமாக இருக்கும் வரையிலும் இதை யாரும் தடுத்துவிட முடியாது. இந்திய அரசியல் சட்டம்(Indian constitution)பள்ளிகள் நடத்தும் உரிமை நடுவண அரசுக்கும் உண்டு என்று கூறுகிறதே!

இவ்வாறு தமிழ்ப் பெற்றோருக்குத் தமிழ் நாட்டிலே பிறந்து, தமிழ்நாட்டிலே வளரும் தமிழ் நாட்டு மாணவர்கள் மிகப் பலர் தமிழே படியாது பள்ளிப் படிப்பும், கல்லூரிப் படிப்பும் முடிக்கும வாய்ப்பிருக்கும் நிலையில், நல்ல தமிழ் இலக்கியங்-கள் படைத்து என்ன பயன்? அவற்றைத் தமிழுணர்வுள்ள சிலரைத் தவிர வேறுயார் படிக்கப் போகிறார்கள்? தமிழே படியாமல் பள்ளிப் படிப்பும், கல்லூரிப் படிப்பும் முடிக்கும் தமிழ் மாணவர்கள் இவற்றை யெங்கே படிக்கப் போகிறார்கள்? இதனால் தான் தமிழ்நாடு இந்தியாவின் ஒரு மாநிலமாக இருக்கும் வரையிலும், இலக்கியப் படைப்புகளால் தமிழினத்துக்கு விளையும் பயன் பெரிதன்று என்-றுரைத்தேன். ஆண்டு 2000-இல் நடுவண் அரசின் அதிகாரத்துக்குட்பட்ட. தமிழ் கற்பிக்கப்படாத பள்ளிகளில் படிக்கும் தமிழ்நாட்டு மாணவரின் தொகை பல இலக்கங்களுக்கு மேலாக இருக்கும் என்பதை உணர்க.

தமிழ்நாடு இந்தியாவிலிருந்து விடுதலை பெறுமாயின் இந்நிலை மாறும். தமிழ் படியாமல் யாரும் பள்ளிப் படிப்பை முடித்திட முடியாது, கல்லூரிப் பட்டங்களைப் பெற்றிட முடியாது என்ற நிலை விடுதலை பெற்ற தமிழ்நாட்டில் இருக்கும். நாம் படைக்கும் தரமான தமிழ் இலக்கியங்களைத் தமிழ் நாட்டு மாணவர்கள் படித்துப் பயன்பெறும் நிலை யேற்படும். அதனால்தான், **எப்பணிக்கும் முதற் பணி தமிழ்நாட்டு விடுதலைப்பணி என்றுரைத்தேன்.** ஆதலின் தமிழுணர்வுள்ள இலக்கிய ஆசிரியர்கள், தங்களின் இலக்கியத் தொண்டோடு கூடத் தங்களது தொண்டின் ஒரு சிறு பகுதியையாவது தமிழ்நாட்டு விடுதலைப் பணிக்காகச் செலவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

2. தமிழினும் வடமொழியே (சமசுக்கிருதமே) உயர்ந்ததென்றும் பல்லாயிரக்கணக்கான தமிழ்ச் சொற்கள் வடமொழியினின்று கடன் வாங்கப் பட்டன வென்றும் வடவரும் அவர்தம் அடியொற்றும் பேதைத் "தமிழறிஞர்" சிலரும் கூறித் திரிந்ததைத் தமிழரும், பிற நாட்டினரும் பலகால் நம்பி மயங்கினர். தமிழின் தனித்தன்மையை முதன் முதலாகத் தக்க அடிப்படைகளுடன் விளக்கி, வெளிப்படுத்திய பெருமை ஐரோப்பியரான **கால்டுவெல்** என்பாரைச் சாரும். மொழியாராய்ச்சியிலேயே முழுகிப் பல்லாயிரம் தமிழ்ச் சொற்களின் மூலமும் வேரும் கண்டு, தமிழின் தனித் தன்மையையும், வடமொழிச் சொற்கள் பல தமிழினின்று கடன் கொள்ளப் பெற்றனவே என்ற உண்மையையும் ஐயமறத் தெளியப் பகர்ந்த பெருமை **தேவ நேயப் பாவாணரைச்** சாரும். அன்னார் காட்டிய வழியொட்டி, மேலும் பல்லாயிரம் தமிழ்ச் சொற்களின் மூலம் காட்டித் தமிழின் தொன்மையையும் வடமொழி தமிழுக்குப் பட்ட கடனையும் நிலைநிறுத்திய பெருமை அருளியைச் சாரும். இத்தகைய மொழியாராய்ச்சிகள் தமிழுக்குத் தேவை. இன்னும் அறிஞர்கள் பலர் இவ்வாராய்ச்சிகளில் பலர் ஈடுபட வேண்டும். ஆனால் தமிழ்நாடு இந்தியாவின் ஒரு மாநிலமாக இருக்கும் வரையிலும் இத்தகைய ஆராய்ச்சிகள் அரைகுறையாகத்தான் நடைபெறும் இவ்வாராய்ச்சிகளின் முடிவுகள் பொதுவாக இலைமறைகாயாய் வெளிநாட்டாருக்குத் தெரியாமல் மூடி வைக்கப்பட்டிருக்கும். விளக்கம் வருமாறு.

தமிழ் வடமொழியினும் முந்தியது, வடமொழி தமிழிடம் கடன் வாங்கியது என்ற உண்மைகளை முடிமறைப்பதும், அதற்கு மாறான கருத்துகளை உலகுக்கு அறிவிப்பதுமே இந்திய அரசின் வழக்கமாக இருக்கிறது. பாவாணர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வேலை பார்த்தபோது, அவரது மொழியாராய்ச்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டு அவர் அப்பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறும் படி செய்தது இந்திய அரசு. இன்று அருளி செய்யும் ஆய்வுகளை இழித்தும் பழித்தும் பேசுகிறார்கள். தமிழ்நாட்டு அமைச்சர்கள் ஒரு சிலர், இத்தூய தமிழ்ப்பணிக்கு இடர் விளைக்கவும் முனைகிறார்கள். மேலும், பாவாணர், அருளி அனையாரின் ஆய்வு முடிவுகளை வெளிநாட்டார் அறிய வாய்ப்பில்லை. அமெரிக்காவிலுள்ள ஆசிய மொழித்துறைப் (Asian languages department) பேராசிரியர் பெரும்பாலரும் தமிழின் தொன்மையை அறிவாரில்லை. வடமொழியே (சமசுக்கிருதமே) உயர்ந்தமொழி, தமிழ் வடமொழியினின்று பெருமளவில், கடன் வாங்கியது என்பன போன்ற இந்திய அரசின் பொய்களையே நம்பி மயங்குகின்றனர். வடமொழியே பழம்பெருமொழி, தமிழ் அதற்குப் பிந்தியது, அதனினும் இழிந்தது என்ற தவறான முடிவுகளைக் காட்டும் மொழியாராய்ச்சிகளுக்கு இந்திய அரசு கோடி கோடியாகப் பணம் கொடுப்பதுடன், அவ்வாய்வுகளின் முடிவுகளை ஆங்கிலத்தில் அச்சடித்து உலகெங்கும் பரப்புகிறது. (ஐயகோ, இதற்கான செலவுகளுக்காகத் தமிழனின் வரிப்பணமும் பயன்படுத்தப்படுகிறதே!)

தமிழ்நாடு இந்திய ஆட்சியினின்று விடுதலை பெற்ற நாடாக அமையுமானால் இந்நிலை மாறும். தமிழ்நாட்டின் வரிப்பணங்கள் இந்திமொழி வளர்ச்சிக்காகவும், சமசுக்கிருதமொழி ஆராய்ச்சிக்காகவும் வடக்கே போகாது. ஒரு சிறு பகுதி தமிழ் ஆராய்ச்சிக்காகவும், வளர்ச்சிக்காகவும் செலவிடப் படும். (தமிழ் ஆராய்ச்சிக்காகவும், வளர்ச்சிக்காகவும், விடுதலை பெற்ற தமிழ்நாட்டில் செலவிடப் படும் பணம், இன்று இந்தி மொழி வளர்ச்சிக்காகவும், சமசுக்கிருத மொழி ஆராய்ச்சிக்காகவும் தமிழ் நாட்டிலிருந்து இந்திய அரசு (நடுவண் அரசு) எடுத்துக் கொண்டு போகின்ற தமிழ் மக்களின் வரிப்பணத்தின் அரைப்பகுதியோ, கால்பகுதியோ வாகவே இருக்கும் என்பதை உணர்க.) விடுதலை பெற்ற தமிழ்நாட்டில், வடவரின் மற்றும் வடவருக்கு அடிபணிந்து நிற்கும் தமிழக அரசியல்காரரின் எதிர்ப்புகளும் குள்ளநரித் தனங்களுமின்றி, தமிழ்குறித்த உண்மையான ஆராய்ச்சிகள் நல்ல முறையில் நடைபெற வாய்ப்பிருக்கும் தமிழ் நாடு விடுதலை பெற்றால், நமது மொழி ஆராய்ச்சிகளின் முடிவுகளை வெளிநாட்டாருக்கும் வெளிப் படுத்தி, உலக அரங்கில் தமிழின் உண்மையான நிலையை நிறுவிட வாய்ப்பிருக்கும்.

இவ்வாறாக, உண்மையான மொழி ஆராய்ச்சிகளுக்கு இந்திய அரசு முட்டுக்கட்டையாக இருப்பதாலும், உண்மையான மொழி ஆராய்ச்சிகள் நடைபெற விடுதலை பெற்ற தமிழ்நாடு வாய்ப்பளிக்கும் என்பதாலும், தமிழ்மொழி ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளாரும், தமிழின் தொன்மையை நிலை நிறுத்தி அதனை உலகுக்கு வெளிக்காட்ட விரும்பு வாரும், அத்தகை பணிகளில் ஈடுபடுவதோடு கூட-

Scanned with CamScanner

தம் பணிகளில் ஒரு சிறு பகுதியையாவது தமிழ் நாட்டு விடுதலை முயற்சிகளுக்காக ஈடுபடுத்துங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்".

3. தமிழ் மொழி தமிழ்நாட்டின் பயிற்று மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் அமைவது இயல்பு. அதற்கான முயற்சிகள் தேவையே. தமிழ்நாடு இந்தியாவின் ஒரு மாநிலமாக இருக்கும் வரையிலும், எத்துணைதான் நாம் முயன்றாலும் இது முழுமையாக நடைபெற வழியேயில்லை. ஏன்? நாளுக்கு நாள் இந்திய நடுவண் அரசின் அதிகாரத்துக்குட்பட்ட (தமிழ் நாட்டு மாநில அரசின் அதிகாரத்துக்குட்படாத) வேலைகள் தமிழ்நாட்டுக்குள்ளே பெருகி வளர்கின்றன. முப்பது, நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாட்டுக்குள்ளே அஞ்சல் துறையும், தொடர் வண்டித் துறையுமே நடுவண் அரசின் அதிகாரத்துக்குட்பட்டிருந்தன. இப்போதோ, வைப்பகங்களும்(banks),பலபெருந்தொழிற்சாலைகளும் இன்ன பிறவும் தமிழ்நாட்டு மாநில அரசின் அதிகாரத்துக்குக் கட்டுப்படாமல்,இந்திய நடுவண் அரசின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டுச் செயல் படுகின்றன, இத்துறைகளில் வேலை செய்யும் தமிழர்கள் இலக்கக்கணக்கில். இவ் வேலைகள் பொதுவாகத் தமிழ்நாட்டரசின் வேலைகளைவிட அதிகச் சம்பளம் கொடுப்பன என்பதும் குறிப்பிடத் தக்கது. தமிழ்நாட்டு மாநில அரசு என்னதான சட்டமியற்றினாலும் இந்த வேலைகளின் பணி மொழியாகத் தமிழை ஆக்கிவிட முடியாது. ஆங்கிலமும் இந்தியுமே இவ் வேலைகளின் வேலை மொழியாக இருக்கும் இதைத் தமிழ்நாட்டு மாநில அரசு மாற்றிவிட முடியாது

மேலும், தனியார் துறையிலும் தமிழ்நாட்டுக்குள்ளே வடநாட்டு முதலாளிகள் நடத்தும் பெருந் தொழிற்சாலைகளும், வணிக நிறுவனங்களும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. இந்தியத்துணைக்கண்டத்தின் ஆட்சி வட இந்தியன் கைக்குப்போன 1947-இல் வட இந்தியன் கையிலிருந்த தமிழ்நாட்டுப் பெருந்தொழிற்சாலைகள்,சிறு தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களின் எண்ணிக்கை கடந்த 47 ஆண்டுகளில் (1947-லிருந்து 1994-வரையிலும்) பல நூறு மடங்குகள் பெருகியுள்ளன. இந்த வட நாட்டு முதலாளிகளின் தமிழ்நாட்டுத் தொழிற்சாலைகளிலும், வணிக நிறுவனங்களிலும் ஆங்கிலமும், இந்தியுமே வேலை மொழியாக இருக்கின்றன. இவற்றை தமிழ்நாட்டு மாநில அரசு மாற்றிவிட முடியாது தமிழ்நாட்டு அரசு இந்நிலை மாறித் தமிழே இவ் வேலைகளின் வேலை மொழியாக அமைய வேண்டுமென்று சட்டமியற்றினாலும் கூட அச் சட்டத்துக்கு இந்திய நடுவண் அரசு ஒப்புதல் கொடுத்தால்தான் அச் சட்டம் நடைமுறைக்கு வர முடியும். வட நாட்டு முதலாளிகளின் தொழிற் சாலைகளிலும், வணிக நிறுவனங்களிலும் ஆங்கிலத்தையும், இந்தியையும் மாற்றி அவ்விடத்தில் தமிழை வேலைமொழியாக ஆக்குவதற்கு இந்திய நடுவண் அரசு ஒப்புதல் கொடுக்கவே செய்யாது என்பது யாவரும் அறிந்ததே. குதிரைக்குக் கொம்பு முளைத்தாலும் முளைக்கலாம். வெள்ளாடு வானிலே பறந்தாலும் பறக்கலாம். ஆனால் வடநாட்டு முதலாளிகளின் தொழிற்சாலைகளிலும், வணிக நிறுவனங்களிலும் ஆங்கிலத்தையும், இந்தியையும் அகற்றித் தமிழை வேலைமொழியாக ஆக்க இந்திய நடுவண் அரசு ஒப்புக்கொடுக்கவே செய்யாது. நிலை இவ்வாறிருப்பதால் தமிழ்மொழி முழுமையாகத் தமிழ்நாட்டின் வேலைமொழியாக அமைவதற்கு வாய்ப்பேயில்லை. தமிழ்நாடு இந்தியாவினின்று விடுதலை பெற்றுத் தனியான நாடாக அமைந்தால் மட்டுமே, தமிழ் மொழி முழுமையாகத் தமிழ்நாட்டின் வேலைமொழியாக அமைய முடியும். அதனால்தான் தமிழ் மொழியைத் தமிழ்நாட்டின் வேலை மொழியாக ஆக்க முயற்சி செய்யும் தமிழன்பர்கள் தங்களது பணிகளின் ஒரு சிறு பகுதியையாவது தமிழ்நாட்டு விடுதலைக்கான முயற்சிகளில் ஈடுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு இந்தியாவின் ஒரு மாநிலமாக இருக்கும் வரையிலும், தமிழைத் தமிழ்நாட்டின் பயிற்று மொழியாக்கும் முயற்சிகளும் முழுப்பயன் இருக்காது. தமிழ் நாடெங்கும் இந்திய நடுவண் அரசின் அதிகாரத்துக்குபட்ட பள்ளிகள் நச்சுக் காளான்கள் போல வளர்ந்து வருகின்றன. இப் பள்ளிகளில் தமிழ் படிக்காமலே பள்ளிப்படிப்பை முடிக்கும் நிலை உள்ளது. மேலும் இத்தகைய பள்ளிகளின் தொகையும், அப்பள்ளிகளில் படிக்கும் தமிழ்நாட்டு மாணவர்களின் தொகையும் ஆண்டுக்கு ஆண்டு கூடிக் கொண்டே வருகிறது. ஆகவே, தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் பள்ளிகளும், கல்லூரிகளும் தமிழ்நாட்டரசின் அதிகாரத்துக்கு உட்பட்டு, தமிழ்நாட்டரசு உறுதிப்படுத்தும் பாடங்கள் தமிழ்நாட்டரசு உறுதிப்படுத்தும் மொழியில் படிப்பிக்க வேண்டும் என்ற நிலை ஏற்படும் வரையிலும், தமிழே பாடமொழி எனும் கொள்கையைத் தமிழ்நாட்டு மாநில அரசு ஏற்றுக் கொண்டாலும் அதனால் ஏற்படும் விளைவுகள் அரைப்படியே. இன்னும் பத்தாண்டுகளில் இந்த அரைப்படி விளைவுகளும் கால்படியாகக் குறுகும் ஏனெனில், தமிழ்நாட்டு மாநில அரசின் அதிகாரத்துக்குக் கட்டுப்படாத, இந்திய நடுவண் அரசின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்ட பள்ளிகளின் தொகை தமிழ்நாட்டில் பெருகிக் கொண்டேயிருக்கிறது. தமிழ்நாடு இந்தியாவின் ஒரு மாநிலமாக இருக்கும் வரையிலும் இந்திய நடுவண் அரசு தமிழ்நாட்டுக்குள்ளே பள்ளிகள் நடத்துவதைத் தடுத்துவிட முடியாது. ஆதலின் உண்மையிலேயே தமிழ்மொழி தமிழ்

நாட்டின் பயிற்று மொழியாக அமைய வேண்டுமென்றால், தமிழ்நாடு இந்தியாவினின்று விடுதலை பெற்றேயாக வேண்டும்.

ஓர் இனம் மற்றோரினத்திடமிருந்து விடுதலை பெற்றுத் தனக்கென ஒரு நாட்டை அமைத்துக் கொள்ளும் போது, விடுதலை பெற்ற நாட்டில் விடுதலை பெற்ற இனத்தின் தாய் மொழியே ஆட்சி மொழியாகவும் (வேலை மொழியாகவும்), பயிற்று மொழியாகவும் அமைவது இயல்பு. எடுத்துக் காட்டாக, உக்ரேனிய இனம் (Ukranians) ஈராண்டுகளுக்கு முன்னால் உருசியப் பேரரசிடமிருந்து விடுதலை பெற்றதும் உக்ரேனிய மொழி ஆட்சி மொழியாகவும், பயிற்று மொழியாகவும் ஆக்கப்பட்டது. இருபத்து மூனறு ஆண்டுகளுக்கு முன்னால் பாக்கிசுத்தானுக்கு அடிமைப்பட்டுக் கிடந்த கிழக்கு வங்காள மக்கள் விடுதலை பெற்று வங்காளதேயம்(Bangladesh) அமைக்கப்பட்டதும் வங்காளமொழி ஆடசி மொழியானது, பயிற்று மொழியானது. இது போல, தமிழ்நாடு இந்தியாவினின்று விடுதலை பெறுமேயானால், உடனடியாகத் தமிழ்மொழி தமிழநாட்டின் ஆட்சி மொழியாகவும், பயிற்று மொழியாகவும மலரும் என்பது திண்ணம். எனவே, தமிழ்மொழி தமிழ்நாட்டின் ஆட்சிமொழியாகவும், பயிற்று மொழியாகவும் திகழவேண்டுமென விருமபும் தமிழன்பர்கள், தங்களது தமிழ்ப் பணிகளின் ஒரு சிறு பகுதியையாவது தமிழ்நாட்டு விடுதலைக்கான பணிகளில ஈடுபடுத்துங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

4 தமிழ் மக்கள் மீது—தமிழ்நாட்டின் மீது—இந்தி திணிக்கப்படுவதை எதிர்க்காத தமிழர் வெகு, வெகு சிலரே. (இச் சிலர் வடவனுக்கு வால் பிடிக்கும் பேராயக் கட்சியைச் சார்ந்த "தலைவர்கள்"சிலர் தாம். இக்கட்சியின் பெரும்பாலரும் கூட இந்தித் திணிப்பின் எதிர்ப்பாளரே என்பதை நாமறிவோம்.) இந்திய அரசோ "நாங்கள் இந்தியைத் திணிக்கவில்லை, திணிக்கவும் மாடடோம்" என்று அடிக்கடி கூறிக் கொண்டே, இந்தியை நேரடியாகவும், மறைமுகமாகவும் திணிக்கிறது. நடுவண் அரசின் அலுவலகங்களில் (அஞ்சல் துறை, தொடர்வண்டித் துறை, படைத் துறை முதலியன), நடுவண் அரசுக்குட்பட்ட வைப்பகங்களில்(banks), உயிரீட்டு மன்றங்களில் (life insurance corporation), தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் தமிழர்கள் இந்தியைப் படித்துத்தானாக வேண்டும். இலலாவிடடால் வேலை உயர்வு கிடைக்காது. இந்திபடிப்பவர்களுக்குப் பணப்பரிசுகளும், வேலை உயர்வுகளும், இன்ன பிற சலுகைகளும் கிடைக்கும். அவர்கள் இந்தியைப் படிக்க மறுததால் வேலை பறிபோகலாம். தொலைக் காட்சியில் (television) இந்தி, இந்தி, எல்லாம் இந்தியே! (சின்னஞ் சிறிய இலங்கைத் தீவிலே, சிங்கள மக்களின சிங்கள மொழியிலே தொலைக் காட்சி காண முடியும். ஏனென்றால் சிங்களவனுக்கென விடுதலை பெற்ற ஒரு நாடு "சிறீலங்கா"("Srilanka)" இருக்கிறது. வங்காள தேச (Bangladash) மக்கள் வங்காள மொழியில் தொலைக்காட்சி காணமுடியும். ஏனென்றால், அவனுக்கென்று விடுதலை பெற்ற ஒரு நாடு இருக்கிறது. தழ்மிநாட்டு மக்கள் தொலைக்காட்சியின முழுப்பயனை அடைய வேண்டுமென்றால் தமிழ் நாடு விடுதலை பெறுவதொன்றே வழி.)

1938-இல் இருந்து கடந்த 46 ஆண்டுகளாக இந்தியெதிர்ப்பு ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், தொடர்வண்டி நிறுத்தங்கள் கடையடைப்புகள்,மறியல்கள், பட்டினிப் போர்கள் (உண்ணா விரதங்கள்) தீக்குளிப்புகள் என எவ்வாறெல்லாமோ இந்தித் திணிப்புக்கு நாம் எதிர்ப்புச் தெரிவித்து விட்டோம். ஆனால நிலைத்த பயன் யாதாவது விளைந்ததா? இல்லையே! 1965-இல் தமிழ்நாட்டு மக்கள் ஒட்டுமொத்தமாகத் தம் இந்தியெதிர்ப்பைத் தெரியப்படுத்தினரே! தமிழ்நாடே வெகுண்டெழுந்து இந்தியத் துணைக் கண்டத்தை அதிரவைத்ததே! வடவனின் படையும், அவர்தம் கைப்பிள்ளையாக நடந்த தமிழ்நாட்டுக் காவல்துறையினரில் (police department) சிலரும் நடத்திய வேட்டெஃகச் சூடுகளில் உயிரிழந்தவர் ஏறத்தாழ ஐந்நூற்றுவர். அவ் வேட்டெஃகச் சூடுகளில் கையிழந்தோ, காலிழந்தோ, முடமாயினோர் சிலவாயிரம். இந்தியத் தலைமையமைச்சர் முதல், இங்குள்ள குட்டித் தலைவர்கள் வரை எல்லாரும் "இந்தி திணிக்கப் படாது" என்று உறுதிமொழி கொடுத்தார்கள்; 1965-இன் போராட்டம் நடந்து 29 ஆண்டுகள் கழிந்து விட்டன. இன்றைய நிலை என்ன? இந்த 29 ஆண்டுகளில் நடுவணரசுப் பணிகளில் இந்தி ஐம்பது மடங்குகளுக்கு மேல் வளர்ந்துள்ளது. 1965-இல் தமிழ்நாட்டில் கேட்கும் வானொலியில் (radio) இருந்த இந்தியை விட இன்று தமிழ்நாட்டில் பார்க்கும் தொலைக்காட்சியில் (television) உள்ள இந்தி **ஆயிரம் மடங்கிலும் அதிகம்.** இந் நிலையில், இந்தி எதிர்ப்புப் போராட்டங்களால் இந்தித் திணிப்பைத் தடுத்துவிட முடியாது என்பது தெளிவு. இந்திக்காரன் நாலடி ஏற நாம் ஊர்வலங்கள் நடத்தி எதிர்ப்புக்காட்டினால் அரையடி இறங்குவான். மீணடும் அதே கதைதான். நாலடி ஏறுவான். நாம் எதிர்க்க அரையடி இறங்குவான். .தமிழ்நாடு இந்தியாவின் ஒரு மாநிலமாக இருக்கும் வரையிலும் தமிழ் நாடடின் மீது இந்தி திணிக்கப் படுவதை நாம தடுத்துவிட முடியாது. ஆதலின் இந்தி எதிர்ப்பு உணர்வுள்ள நற்றமிழ் நெஞ்சங்கள் தம் இந்தியெதிர்ப்பு முயற்சிகளுடன கூட தமிழ்நாட்டு விடுதலைக்கான முயற்சிகளிலும் ஈடுபடுக' என்று கேட்டுக் கொள்கிறேன். (இந்தியால் தமிழ் மொழி மட்டுமன்று, தமிழரின் பொருள் நிலைகள், வாழ்க்கை வசதிகள் அனைத்தும் குறைவுபடும் என்பதுணர்க'.

Scanned with CamScanner

"ஆட்டுத் தோல் போர்த்த இந்தி ஓநாய்" (தென்மொழி சுவடி 25. ஓலை 7)என்ற கட்டுரை இதனை விளககியுரைக்கிறது.)

ஆகமொத்தம், எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்க்கும் போது, தமிழ்நாட்டு விடுதலைக் கான பணியே தமிழின நலங்குறிந்த எல்லாப் பணிகட்கும் அடிப்படையான பணியென்றும், தமிழ்நாடு விடுதலை பெறுதவரையிலும் பிற தமிழ்ப் பணிகளெல்லாம் தற்காலிகமாக அரை குறையான நலங்களையே விளைக்குமென்றும் விளங்குகிறது. ஆதலின், தமிழினத்தின் — தமிழ் மொழியின் — தமிழ்நாட்டின் நலங்கருதுவார் எல்லாரும், தாம் ஈடுபட்டுள்ள தமிழ்ப் பணிகள் எதுவாயினும், தாம் அவ்வப்பணிகளுக்காகச் செலவிடும் தங்கள் **செயல்களின், பொருள்களின் ஒரு சிறு பகுதியையாவது தமிழ்நாட்டு விடுதலைக்கான முயற்சிகளில் ஈடுபடுத்த வேண்டுமெனக் கேட்டுக்** கொள்கிறேன்.

இலக்கியப் படைப்பு, மொழியாராய்ச்சி, ஆட்சி மொழி—பயிற்று மொழி முயற்சிகள், இந்தி எதிர்ப்புப் போர் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ள நற்றமிழ்த் தொண்டர்களும், தலைவர்களும் (அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்திருந்தாலும் சரி, எந்த இயக்கத்தைச் சார்ந்திருந்தாலும் சரி) தங்கள் தொண்டின் ஒரு சிறு பகுதியையாவது கீழ்க் காணும் தமிழ்நாட்டு விடுதலைப் பணிகளில் ஈடுபடுத்த வேண்டுமெனத் தமிழ்த் தாயின் பேரால் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அ) தமிழ்நாட்டு விடுதலையின் தேவையைப் பற்றி உங்கள் குடும்பத்தினரிடமும், நண்பர்களிடமும், உடன் வேலை பார்ப்போரிடமும், பக்கத்து வீட்டுக்காரரிடமும், ஊர்க்காரர்களிடமும் அன்பாக எடுத்துச் சொல்லுங்கள். அவர்கள் சொல்லும் கருத்துகளுக்கு செவி கொடுங்கள். மதிப்புக் கொடுங்கள். அவர்களின் கருத்துகளில் தவறிருந்தால் தக்க காரணங்களுடன், விளக்கம் கூறி அப்பிழைகளை அவர்களுக்கு அன்புடன் உணர்த்துங்கள். தமிழ்நாட்டு விடுதலைக்காக நடைபெறும் பல்வேறு முயற்சிகளை எடுத்து விளக்கி, அவர்கள் தமிழ்நாட்டு விடுதலைக்காக என்னென்ன செய்யலாம் என்பது பற்றிப் பேசுங்கள். அவர்களின் கருத்துகளையும் தெரிந்து கொள்ளுங்கள். இக் கட்டுரையைப் படிக்கும் அன்பர்கள் ஒவ்வொரு வரும் ஆண்டுக்குப் பன்னிரண்டு பேரிடம் தமிழ்நாட்டு விடுதலையைப் பற்றிப் பேசி, அப் பன்னிருவரில் இருவரேனும் தமிழ்நாட்டு விடுதலையின் தேவையை உணர்ந்து தமிழ்நாட்டு விடுதலைக் காகச் செயல்பட முன்வருவரேல். அதனால் விளையும் பயன் மாண்பெரிதேயன்றோ?

ஆ) தமிழ்நாட்டு விடுதலையைப் பற்றிய கருத்துகளை வெளியிடும் தாளிகைகளுக்கும், இதழ் களுக்கும், மற்றும் தமிழ்நாட்டு விடுதலைக்கான பணிகளுள் ஈடுபட்டுள்ள பல்வகையான இயக்கங்களுக்கும் இயன்ற பண உதவியை நேரடியாகவோ, மறைமுகமாகமோ செய்யுங்கள். இவ்வியக்கங்களைப் பற்றிய தவறான கருத்துகளை அரசும், தமிழின உணர்வற்ற தாளிகைகளும் வெளியிடும் போது, இயக்கங்களின் உண்மையான நிலைகளைப் பற்றியும், அவற்றின் தேவையைப் பற்றியும், அவ்வியக் கங்களில் ஈடுபட்டுள்ளாரின் தன்னலமற்ற ஈகச் செயல்களைப் பற்றியும் நண்பர்களுக்கும். உற்றார் சுற்றருக்கும் எடுத்துரையுங்கள்.

இ) இலக்கியப் பணிகளில் ஈடுபட்டுள்ள அன்பர்கள் தமிழ்நாட்டு விடுதலையின் தேவையை உணர்த்தும் கட்டுரைகளும், கதைகளும், நாடகங்களும், பாடல்களும் எழுதித் தக்க தாளிகைகளிலும், இதழ்களிலும் வெளியிடுங்கள். பொதுக் கூட்டங்களில் பேசுங்கள், கலைநிகழ்ச்சிகளில் பாடல்களாகப் பாடுங்கள். நாடகங்களாக நடத்துங்கள்.

ஈ) தமிழ்நாட்டு விடுதலையின் தேவையை விளக்கிச் சிறு துண்டறிக்கைகள் (pamphlets) எழுதி, ஊர்ப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் பரப்புங்கள். அத்துண்டறிக்கைகளில் தமிழ்நாடு இந்திக்காரருக்குக் கட்டுப்பட்ட இந்திய அரசுக்கு (தில்லி அரசுக்கு) அடிமைப்பட்டுக் கிடக்கும் நிலையையும், அதனால் தமிழ்மொழிக்கு மட்டுமல்லாமல் தமிழ் மக்களுக்கும் ஏற்படும் இழிவுகளையும், பொருள் நிலைத் தாக்கங்களையும் (தமிழ் மக்கள் பொருளளவில் இந்திக்காரரால் எவ்வளவு சுரண்டப் படுகிறார்கள் என்பது பலருக்குத் தெரியாது) தமிழ்நாடு விடுதலை பெற்றால் தமிழ் மொழி சீருற்று வளரும் என்பது மட்டுமன்றித், தமிழ் மக்களின் வாழ்க்கை வசதிகளும் உயரும் என்பதையும் விளக்குங்கள் (இந்திக்காரன் இன்று பல கோடிக் கணக்காக நடுவண் அரசுக்கான (தில்லி அரசுக்கான) வரி என்றும், வட இந்தியச் சிறிய மற்றும் பெரிய முதலாளிகளின், வணிகர்களின் ஊதிய (இலாப)மென்றும் (Profits) அள்ளிச் செல்லும் கோடி கோடியான பணங்களெல்லாம் தமிழநாட்டுக் குள்ளேயே தங்கியிருந்தால் தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கை வசதிகள் ஓரளவு தானக வளர்ந்து படும் என்பதுறுதி.)

எ) தமிழ்நாட்டு விடுதலைக்கான வினைப் பாடுகளில் முனைப்பாக ஈடுபட்டுள்ள இயக்கங்களில் சேர்ந்து செயல்படுங்கள். பல்லாயிரம் பேர்கள் இவ் வியக்கங்களின் சேர்ந்து செயல்பட்டால்தான் தமிழ்நாடு விடுதலை பெற முடியும்.

"ஆண்டு நூறாயினும் அன்னைத் தமிழ்நாடு
வேண்டும் விடுதலை எண்ணம் விலக்கோம்நாம்!
பூண்டோம் உறுதி; புறப்பட்டோம் என்றே நீ
மூண்டஇடியாய் முழங்காய் தமிழ் மகனே!"

—பெருஞ்சித்திரனார். O

அறிவியக்கப் பேரவை சார்பில் 30-4-94-இல் சென்னையில் நடைபெற்ற மொழிச் சிறுபான்மையினர் உரிமைகள் சீரமைப்பு மாநாட்டில்

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

1 சிறுபான்மை மொழியினருக்குப் பாதுகாப்பு என்ற பெயரில், தமிழகத்தின் தாய்மொழியாகிய தமிழின் உரிமையைக் கடுமையாகத் தாக்கக் கூடிய ஆணை ஒன்றை 29-12-93-இல் பிறப்பித்துள்ள தமிழக அரசை வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்த ஆணையை உடனடியாகத் திரும்பப் பெற்று இந்த ஆணையால் தமிழகத்தில் வாழும் மக்களிடையே ஏற்படக் கூடிய தேவையில்லாத மோதல்களைத் தவிர்த்திட வேண்டும் என்றும் இதைச் செய்யத் தவறினால் தமிழக அரசு தமிழர்களின் கடுமையான எதிர்ப்பைச் சந்திக்க நேரும் என்றும் இந்த மாநாடு தமிழக அரசை எச்சரிக்கிறது.

2 தமிழகத்தில் தமிழ் மொழியே ஒரே ஆட்சிமொழி ஆவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் தமிழக அரசு உடனேயே மேற்கொள்ள வேண்டும். இந்தச் செயற்பாட்டுக்குத் துணையாக,— தமிழ்நாட்டுக் குழந்தைகள் எல்லாருக்கும் தமிழ் மொழியே பாடமொழி என்றும் தங்கள் தாய்மொழி மூலம் கல்வி கற்கும் சிறுபான்மை மொழியினர் யாராவது தமிழ் நாட்டில் இருந்தால் அவர்களும் பத்தாம் வகுப்பு வரையிலாவது தமிழை ஒரு கட்டாயப் பாடமாகப் படித்தாக வேண்டும் என்றும் சட்டம் செய்ய வேண்டும் என்று இந்த மாநாடு தமிழக அரசை வற்புறுத்தி வலியுறுத்துகிறது.

3. தமிழகத்தில் வாழும் மொழிச் சிறுபான்மையினர்கள் தங்கள் மக்கள் தொகையின் விழுக்காட்டுக்கு ஏற்ற அளவில் கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் தனி இட ஒதுக்கீடு கோரும் தவறான தடத்தில் இறங்கி இருப்பதாகத் தெரிகிறது. இந்தக் கோரிக்கை இந்த மாநிலத்துப் பெரும்பான்மை மக்களான தமிழர்களுக்கு எதிரான சண்டித்தனமாகவும் இன, மொழி வேறுபாடு இல்லாமல் எல்லாருக்கும் இட ஒதுக்கீடு வழங்கும் மாபெரும் குமுக நெறித் திட்டமாகிய மண்டல் திட்டத்தை அவமதிப்பதாகவும் இருப்பதால் இந்த நெறியில்லாத கோரிக்கையை ஏற்றிடக் கூடாது என்று இந்த மாநாடு தமிழக அரசை வற்புறுத்தி வலியுறுத்துகிறது.

பேராசிரியர் —சாலை இளந்திரையன்
மாநாட்டுத் தலைவர்.

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறம் மாறுவதும், மற்றவர்களை அடக்கி ஆளுவதற்கான அறிவுத் திறமும், மற்ற கலைகளில் சிந்தனை செய்வதற்கான வாய்ப்பும் ஏற்படுகின்றன. இயற்கையை வணங்கிய உழைக்கும் மக்களை உளவியல் வழியில் ஒடுக்குவதற்கு, உருவங்களை அடிப்படையாகக் கொண்ட தெய்வங்கள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். பின்னர் வடக்கிலிருந்து வந்த ஆரியரோடு கலந்து ஆரியப் பார்ப்பனராயிருக்க வேண்டும். மேலும்பறையரைத் தந்திரமாகக் கடவுளைக் காட்டி ஏமாற்றி அச்சுறுத்தி அரசின் துணையோடு ஆரியப் பார்ப்பனர்கள் கோவில் பூசாரிகளாக வந்து இருக்க வேண்டும் என்ற வரலாற்று உண்மையும் மறைந்து கிடப்பதாகத் தெரிகின்றது. புராணங்கள் போல் இவ் வரலாறு நீண்டு கிடந்தாலும், இதில் ஆர்வமுள்ளவர்கள் ஆய்வு செய்து உண்மையை வெளிப்படுத்த வேண்டும்.

உலகில் பல துறைகளில் முன்னேறிய நாடுகளாயினும் சரி, ஆசியா, ஆப்பிரிக்கா, இலத்தின அமெரிக்கா போன்ற கண்டங்களிலுள்ள பின் தங்கிய நாடுகளாயினும் சரி, எல்லா நாடுகளிலுமே இந்த இனக் குழுக்களின் (சாதிகள்) நிலைப்பும் அவற்றைப் பிரித்தும் ஒடுக்கியும் அங்கங்குள்ள பொதுவான மதக் கோட்பாடுகளோடு இணைத்தும், ஆளுமை செய்கின்றனர். இந்தியாவில் ஆரியப் பார்ப்பனர்களும் பெருமுதலாளிகளும் தங்களுக்குத் துணையாக அந்தந்தத் தேசிய இனத்திலுள்ள மேல் சாதிய நிலவுடைமையாளரையும் சிறு தரகு முதலாளிகளையும் துணைக்கு வைத்துக் கொண்டு சாதியத்தையும் இந்து மதக் கோட்பாடுகளையும் கட்டிக்காக்கின்றனர். சாதியுணர்வும் மதவுணர்வும் மக்களிடம் ஒழிக்கப் பட்டிருந்தால், பார்ப்பனியமும் முதலாளியமும் என்றோ ஒழிக்கப்பட்டிருக்கும்!

ஆகவே இக் கட்டுரை பல கோட்பாடுகளைப் பின்பற்றிய மாந்த நேயச் சிந்தனையாளர்கள் மற்றும் குமுக ஆய்வாளர்களின் கருத்துகளின் வழிகாட்டல்களின் தொகுப்புதான் என்றாலும், அவற்றை உள்வாங்கிக் கொண்டும், நடைமுறையை கூர்ந்து நோக்கியும் நாம் செயல்பட வேண்டும். ஏனெனில் பார்ப்பனியம் காலந்தோறும் தன் வடிவத்தை மாற்றிக் கொள்ளும். தமிழகத்தில் இனவியல் உரிமையை மீட்பதாயினும், அல்லது உழைக்கும் வகுப்பு மக்களின் விடுதலையைப் பெறுவதாயினும் அல்லது தமிழகத்தின் சிறு தேசிய முதலாளிகளின் உரிமையை மீட்பதாயினும், இதுவரை பார்ப்பனியம் கட்டிக்காத்து வந்துள்ள சாதியத்தையும் இந்து மதக் கோட்பாடுகளையும் தகர்க்காமல், நாம் அணுவளவு மாற்றத்தையும் செய்துவிட முடியாது. ஆகவே இப்பார்ப்பனியத்

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)
பட்ட மக்களின் சமநிலைக்கு உறுதி செய்யப்படும்; (தாழ்த்தப்பட்ட மக்கள் என்றும் பலவாறும் ஆன பகுப்பு முறைகள் ஒழிக்கப்படும்—இதழாசிரியர்.)

3) தற்போழுதய தரகு-பார்ப்பனிய வல்லரசியத்தின் கல்வி முறையும் நிறுவனங்களும் ஒடுக்கப்படும்; உழைப்புடன் இணைந்த தேசிய அறிவியல் கல்வி வழங்கப்படும்; கல்வி நிறுவனங்கள் மீதான சாதி, மத வல்லாண்மை ஒழிக்கப்படும்; தன்னாட்சி, தற்சார்பு, குடிநாயகத் தேசியப் பொருளியல், அரசியல் பண்பாடு, ஆகியவற்றுக்கு உதவும் முகமாகக் கல்வி அமைக்கப்படும்; எழுத்தறிவின்மை முற்றாக ஒழிக்கப்படும்;

4) தமிழ் மட்டுமே அனைத்து மட்டங்களிலும் கல்வி, ஆட்சி, ஞாயமன்றம் முதலான அனைத்துத் துறைகளுக்கான மொழியாக்கப்படும்; தமிழின வளர்ச்சிக்கும் வளத்திற்கும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப் பெறும்.

5) மகளிர் உரிமை பாதுகாக்கப்படும்; ஆண்டுகளுக்கு நிகராக மகளிர் அனைத்துத் துறைகளிலும் திகழ உறுதி செய்யப்படும்; மகளிரை இழிவு படுத்துவது, உரிமை பறிப்பது, ஒடுக்குவது போன்றவை தண்டனைக்குரிய குற்றங்களாக்கப் படும்.

6) குழந்தைகள், முதியவர்கள் நலன்கள் முற்றாகப் பேணப்படும். உறுப்புக் குறைவுற்றவர்கள் (ஊனமுற்றவர்கள்) நலன் பாதுகாக்கப்படும்; அனைத்து மக்களுக்கும் நல் வாழ்வும், மருத்துவ வாய்ப்புகளும் உறுதி செய்யப்படும்.

7) தமிழகத்தின், தமிழ் இனத்தின், தமிழ் மொழியின் தொன்மைச் சிறப்புகள் மீட்கப்படும். தமிழக வரலாறு சரியான முறையில் எழுதப்படும்; தமிழ் அறிஞர்கள் போற்றப் பெறுவர். தமிழ் மருத்துவம், இசை, நாடகம், மற்றும் கலை, இலக்கியங்களும், விளையாட்டுகளும் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்படும். தமிழ் அறிவியல் ஆய்வுகள் ஊக்குவிக்கப்படும்.

8) அனைத்துத் துறைகளிலும் சமசுக்கிருத, ஆங்கிலமயமாதல் ஒழிக்கப்பட்டுத் தமிழ் மீட்கப் படும்.

ஈ, அயலுறவுத் துறையில்:

1) வல்லரசியங்களுடனான இந்தியத் தரகு—பார்ப்பனிய வல்லரசியத்தின் எல்லா உடன்பாடுகளும் நீக்கம் செய்யப்படும். மக்கள் பகை, தேசப் பகை அரசியல் கூட்டு உடன்பாடுகள் அனைத்தும் நீக்கம் செய்யப்படும்;

2) வல்லரசியங்களின் புதிய வன்குடி வல்லாண்மைக்கும், வல்லாண்மைப் போட்டிக்கும் எதிராக உறுதியாகப் போராடும் பிற நாடுகளுடன் . சமதகுதியுடன் உறவை உறுதிப் படுத்தும்;

8) குமுகாய வேறுபாடுகள் பற்றிய கவலையின்றி அனைத்து நாடுகளுடனும் ஐநெறிக் கொள்கைகளின் அடிப்படையில் உறவைப் பேணும்; (அவையாவன: நாடுகளின் தன்னாட்சி—ஒருமைப்பாட்டை மதித்தல், பிற உள் நாட்டு நிகழ்வுகளில் தலையிடாமை, நாடுகளிடையே சமநிலை பேணுதல், வலிந்து கைப்பற்றுதலை எதிர்த்தல், அமைதி இணை வாழ்வைப் பேணுதல்.;

4) தேசிய விடுதலை இயக்கங்களுக்கும், மக்கள் குடிநாயக இயக்கங்களுக்கும். புரட்சி இயக்கங்களுக்கும், தமது உறுதியான துணைதரவை வழங்கும் அம் மக்களோடும், நாடுகளோடும், ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பேணும்; நிறவெறி, இனவெறி, மதவெறி, மரபின வெறி, கொடுநெறி மற்றும் அனைத்து மக்கள் பகை ஆற்றல்களுக்கும் எதிராகப் போராடும்; அயலக, புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் நலம் பேணும்;

5) பாட்டாளி வகுப்பு உலகியம், மார்க்சிய—இலெனினிய மெய்ம்மம், தோழமைப் புரிந்துணர்வு, நல்லுதவி அடிப்படையில் பொதுமை இயக்கங்களுடனும்; நாடுகளுடனும் நட்புணர்வைப் பேணும்:—இவ்வகை விளைவுகளைச் செயற்படுத்த, தேசிய விடுதலைப்புரட்சிக்குப் பாட்டாளி வகுப்பு தனது தலைமையை அதன் அரசியல் கட்சியான தமிழ்நாடு மார்க்சிய—இலெனினியக் கட்சியின்வாயிலாகச் செலுத்தும் (பக்: 44)

தேசிய விடுதலைப் புரட்சியை இறுதிவரை எடுத்துச்செல்ல எல்லாப் புரட்சி வகுப்புகளையும், பிற தேசப் பற்றும் வல்லரசிய எதிர்ப்புத் தன்மையும் கொண்ட தேசியக் குடிநாயக ஆற்றல்களையும், ஒன்றிணைத்து ஒரு தேசிய விடுதலை முன்னணியைத் தொழிலாளர்—உழவர் கட்டை அடிப்படையாகக் கொண்டு, பாட்டாளி வகுப்புத் தலைமையில் கட்சி கட்டும்; தேசிய விடுதலை முன்னணி, புரட்சியின் தொடக்கத்திலிருந்தே புரட்சி தேசிய அரசு என்னும் முழக்கத்துடன் கட்டப்படுகிற தேசிய இயக்கத்திலிருந்து, புரட்சிப் போராட்டங்களினூடே படிப்படியாக வளர்த்தெடுக்கப்படும். கட்சியும் முன்னணியும் இந்தியத் தரகு—பார்ப்பனிய வல்லரசியத்துக்கு எதிராக எல்லாத் தேசிய இனங்களிலும் உள்ள புரட்சிக் குடிநாயக ஆற்றல்கள், இயக்கங்களுடனும், தேசிய விடுதலை ஆற்றல்கள், இயக்கங்களுடனும் இடைவிடாத தொடர்புகளைப் பேணும்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

(முன் பக்கத் தொடர்ச்சி)
தாலும் முதலாளியத்தாலும் அதிகம் தாக்கமுற்றுள்ள, தாழ்த்தப்பட்ட மக்களின் தலைமையில், பாட்டாளி வகுப்பின் அரசியல் வழிகாட்டலோடும், மற்ற உழைக்கும் மக்களின் துணையோடும்தான் தமிழகம் மீட்சி பெறமுடியும் 'தமிழியம்' மலர்ந்தால்தான் 'உலகியம்' மலர முடியும். ஏனெனில் தமிழர்கள் உலகத்தைப்பற்றிச் சிந்தித்துத் தங்களுடைய இலக்கியங்களைக் கூட 'உலகம்' என்ற சொல்லை முன்னிலைப்படுத்தியே இயற்றியுள்ளனர்.

கருத்துகளைக் களத்திற்குக் கொண்டு வருவோம்!
சிந்தனைகளைச் செயலாக்குவோம்!! O

தமிழகப் பள்ளிகளில், ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி-எதிர்த்துப் போராட்டம்!

தமிழகப் பள்ளிகளில் ஒவ்வொரு திங்கள், வெள்ளி நாள்களில், மாணவர்கள் கட்டாயம் ஆங்கிலத்தில்தான் பேசவேண்டும் என்று அரசு கட்டளையிட்டிருந்தது; இந்த ஆணையைக் கைவிட வேண்டும் என்றும், தமிழ்மொழியை அரசு பயிற்று மொழியாகவும், ஆட்சி மொழி அற மன்ற மொழியாகவும் மேம்படுத்தவும் வளர்த்தெடுக்கவும் வேண்டும் என்றும் 27-8-94 அன்று சென்னையில், தலைநகர்த் தமிழ்ச் சங்கம் சார்பில், முதலமைச்சர் செயலலிதா வீட்டுமுன் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்றும் தமிழறிஞர்கள் அறிவித்திருந்தனர்; அதன்படி, அன்று மாலை 4 மணியளவில், வள்ளுவர் கோட்டம் முன்னர் அனைவரும் ஒன்று கூடி 6 மணி வரை போராட்டம் தொடர்பாகப் பலரும் கருத்துரை வழங்கினர். அதன் பின்னர் காவலர்கள் புறப்படவிருந்த ஊர்வலத்தினரில், பெண்கள் பத்துப் பேர் உள்பட நூறு பேர்களைத் தளைப்படுத்தி, மற்றவர்களைப் போகச் செய்தனர்; போராளிகள் நுங்கம்பாக்கம் காவல் நிலையம் கொண்டுச் செல்லப் பெற்றுப் பின்னர் விடுவிக்கப் பெற்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுத் தளைப்பட்டோரில் தமிழாசிரியர் கழகச் சார்பில் பச்சையப்பன், அண்ணாமலை, உலகத் தமிழின முன்னேற்றக் கழக சார்பில் பெருஞ்சித்திரனார், தலைநகர்த் தமிழ்ச் சங்கம் சார்பில் இரா.சேது, ப.சாத்தன், மா.சு.சம்பந்தன், செயலாளர் புலவர் த.சுந்தரராசன், அறிவியக்கப் பேரவை சார்பில் சாலை இளந்திரையன், சாலினி இளந்திரையன், தமிழ், தமிழர் இயக்கச் சார்பில் சுப.வீரபாண்டியன், தியாகு, ம.தி.மு.க. சார்பில் பழ.கருப்பையா, மற்றும் தாமரை பெருஞ்சித்திரனார், தேன்மொழி அருளி, பிறைநுதல் குணத்தொகையன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். O

(முன் பக்கத் தொடர்ச்சி)

தேசிய விடுதலைப் புரட்சி மூலம் ஒரு மக்கள் குடிநாயக அரசை நிறுவுவதற்குப் பாட்டாளி வகுப்பு ஒரு தேசிய மக்கள் போரை நடத்தும்; பரந்து பட்ட மக்களை ஒன்று திரட்டி, அவர்களைச் சார்ந்து நின்று, மக்கள் அரசியல் படையும் அதிலிருந்து படைக்கலப் படையையும் கட்டுவதன் மூலமே இத்தகைய போரைத் தொடங்க முடியும்;

கட்சி, புரட்சியின் தேவையை யொட்டி கமுக்கமான, வெளிப்படையிலான, சட்டப்படியான முறைகளைத் தெளிவுணர்வுடன் பின்பற்றும்; • (பக்: 44-45)

உலகின் பொதுமை இயக்கங்கள், நாடுகள், ஒடுக்கப்பட்ட நாடுகள் மக்களுடனான நமது மக்களின் ஒற்றுமை, தமிழ்நாடு விடுதலைப் புரட்சிக்கு முழுமையான வெற்றியைக் கொண்டு வரும்... வெற்றிக்கான அந்த நாள் வெகு தொலைவில் இல்லை; (பக்: 47)

(இவ்வறிக்கையின் முழுமையான நூல் வேண்டுவோர் புரட்சிகர இளைஞர் முன்னணித் தோழர்களிடமிருந்து பெற்றுக் கொள்க.) O

TN/MS(C)657

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு-92

அரசுக்கு ஆதரவாக நடந்து கொண்டால் முட்டாளுக்கும் அறிஞர் பட்டம் கிடைக்கும். குருடனும் நல்லகண்ணன் என்று புகழப் படுவான்.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்: 172.)

அனுப்புதல்:

தமிழ்நிலம்
5, அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:

தனி இதழ் விலை	உரு: 1-50
ஆண்டுக் கட்டணம்	உரு: 36.00
அரையாண்டுக் கட்டணம்	உரு: 18-00

பெறுநர்: நூல் அஞ்சல்

திரு / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.

Scanned with CamScanner